# Eastern University, Sri Lanka
## Faculty of Arts and Culture
### Second Year Second Semester Special Degree Examination in Economics (2016/2017)
### (2015/16 Batch)(Nov, 2019)
ECS 2233 Managerial Economics

---

நேரம்: 03 மணித்தியாலங்கள்

*பகுதி I ல் எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் பகுதி II ல் எவையேனும் மூன்று வினாக்களுக்கும் விடையளிக்குக.*

## பகுதி I

1. i. முகாமைத்துவப்பொருளியல் என்றால் என்ன? முகாமைத்துவப்பொருளியலானது உற்பத்தி மற்றும் சேவைகள் நிறுவனங்களுக்கு எவ்வாறு முக்கியத்துவப்படுகின்றது? 07 புள்ளிகள்

ii. நெல்லுற்பத்தியின் கேள்வி மற்றும் நிரம்பல் சமன்பாடுகள் பின்வருமாறு தரப்படுகின்றன.

$$Qd = 800-10P$$

$$Qs = -100+10P$$

a. சந்தைச்சமநிலை விலை மற்றும் தொகையினைக் கணிப்பிடுக. 05 புள்ளிகள்

b. அரசாங்கமானது நெல்லுற்பத்திக்கான குறைந்தபட்ச விலையாக சமநிலைவிலையின் 10% வீதத்தினை அதிகரிப்பாக நிர்ணயிக்குமாயின் மிகைநிரம்பலைக் கணிப்பிடுக. 04 புள்ளிகள்

c. நெல்லுக்கான கேள்வியினை சமநிலைத் தொகையிலிருந்து 5% ஆல் அதிகிரிக்கவேண்டுமாயின் புதிய விலை நிர்ணயத்தினைத்தருக. 04 புள்ளிகள்

மொத்தம் 20 புள்ளிகள்

2. i. நெகிழ்ச்சி என்றால் என்ன? நெகிழ்ச்சிக் குணக கணிப்பீடுகளுக்கு பிரயோகிக்கப்படும் கணிப்பீட்டு முறைகளைத்தருக. 03 புள்ளிகள்

ii. பின்வரும் கூற்றுக்களை ஏற்றுக்கொள்கின்றீரா? காரணம் தருக.

a. ஒரு நிறுவனத்தின் உற்பத்திப்பொருளின் கேள்வியின் விலை நெகிழ்ச்சியானது ஒன்றுக்கு குறைவாகக் காணப்படுகின்றபோது அப்பொருளின் விலையினை சந்தையில் குறைப்பதன் மூலம் மொத்த வருமானத்தினை அதிகரிக்கமுடியும். 02 புள்ளிகள்

b. பண்டங்களிடையேயான விலைக்குறுக்கு நெகிழ்ச்சியானது அப்பண்டங்கள் பிரதியீட்டுப்பண்டங்கள் எனின் நேர்க்கணியமாக காணப்படும். 02 புள்ளிகள்

c. ஒரு நிறுவனத்தின் உற்பத்தியின் விலை நெகிழ்ச்சியினை அந்நிறுவனத்தின் சந்தைப்பங்கு (Market share) தீர்மானிக்கமுடியும். 02 புள்ளிகள்

d. குறுங்காலத்தில் கூடிய நெகிழ்ச்சியாக காணப்படுகின்ற ஒரு பண்டத்தின் விலை நெகிழ்ச்சியானது நீண்ட காலத்தில் குறைந்ததாக காணப்படலாம். 02 புள்ளிகள்

iii. சந்தைத்தரவுகளினடிப்படையில் உடைகளை உற்பத்தி செய்யும் நிறுவனம் ஒன்று தனது ஒரு உற்பத்தியான T-Shirt னது கேள்விச்சமன்பாட்டினை பின்வரும் அட்டவணைமூலம் குறிப்பிடுகின்றது.

குறிப்பு: அனைத்து காரணிகளும் மடக்கைக்கு மாற்றப்பட்டுள்ளது (logarithm)

| **Variables** | **Coefficient** | **t-value** | **p-value** |
|---|---|---|---|
| வெட்டுத்துண்டு | 1.499 | 4.596 | 0.000 |
| விலை | -1.265 | 2.568 | 0.000 |
| போட்டிப்பொருளின் விலை | 0.568 | 0.265 | 4.698 |
| விளம்பரத்திற்கான செலவு | 1.985 | 2.005 | 0.050 |
| 20-35 வயதுடையவர்களின் வருமானம் | 1.568 | 2.598 | 0.005 |
| 35-55 வயதுடையவர்களின் வருமானம் | 0.986 | 1.112 | 2.365 |
| R-square | 85.369 | | |

a. காரணிகளுக்கான குணகங்களையும் R-square பெறுமதியினையும் விளக்குக. 05 புள்ளி

b. காரணிகளின் குணகங்களுக்கான பொருண்மை மட்டங்களைக் கணிக்குக. 04 புள்ளி

மொத்தம் 20 புள்

**3.** i. குறுங்கால உற்பத்தி தொழிற்பாடு என்றால் என்ன? ஒரு உற்பத்தி நிறுவனம் தொடர்ந்து குறுங்காலத்தில் தொழிற்படுவதற்கான ஏது நிலைகளை சுருக்கமாக குறிப்பிடுக. 03 புள்ளி

ii. பின்வரும் குறுங்கால உற்பத்தி தொழிற்பாட்டினை கவனத்திற்கொள்க.

$$Q=f(L,K)= 42L+ 18L^2 - L^3.$$

Q = வெளியீடு K = முதலீடு L = ஊழியம்

a. எல்லை உற்பத்தி மற்றும் சராசரி உற்பத்தி தொழிற்பாடுகளை வரையறுக்குக. 02 புள்ளி

b. சராசரி உற்பத்தி உச்சபுள்ளியிலும் குறைந்து செல்லும் விளைவுவிதியின் ஆரம்பபுள்ளியிலும் ஊழிய மட்டத்தினை கணிக்குக. 04 புள்ளி

c. மொத்த உற்பத்தியின் அதிகரிப்பு வேகமாற்றப்புள்ளியில் ஊழியத்திற்கான உற்பத்தியின் நெகிழ்ச்சியினை கணிக்குக. 03 புள்ளி

iii. Miller உற்பத்தி நிறுவனத்தின் உற்பத்தி தொழிற்பாடு பின்வருமாறு காணப்படுகிறது

$$Q = 40X^{0.5}Y^{0.5}$$

Q = வெளியீடு X, Y = உள்ளீடுகள்

உள்ளீடுகள் X, Y என்பவற்றின் காரணிச்சந்தையில் ஒரு அலகுக்கான விலைகள் முறையே \$100 , \$20 ஆகத்தரப்படுகின்றன. நிறுவனம் காரணிக் கொள்வனவிற்காக \$16000 ஒதுக்கீடு செய்கின்றது எனக்கொள்க.

a. உத்தம மட்டத்தில் உள்ளீடுகள் X, Y என்பவற்றின் மட்டத்தினை கணிக்குக 04 புள்ளிகள்

b. உத்தம மட்டத்தில் வெளியீட்டு மட்டத்தினைக்கணிக்குக. 02 புள்ளிகள்

c. $\lambda$ பெறுமதியினைக்கணிக்குக 02 புள்ளிகள்

மொத்தம் 20 புள்ளிகள்

## பகுதி II

4.

i. ஒரு நிறுவனத்தின் அளவுத்திட்ட சிக்கனத்தினை வரைபட உதவியுடன் விளக்குக. 04 புள்ளிகள்

ii. ஒரு நிறுவனமானது அளவுத்திட்ட சிக்கனத்தினை அனுபவிப்பதற்கு செல்வாக்கு செலுத்தும் காரணிகளை சுருக்கமாக விளக்குக. 07 புள்ளிகள்

iii. பின்வரும் ஒரு நிறுவனத்தின் ஊழியர்களின் Learning Effect தொழிற்பாட்டினைக கருத்திலெடுக்குக

$$Y - 100x^{-0.322}$$

a. ஊழியர்கள் 50 ஆவது 100 ஆவது மற்றும் 155 ஆவது அலகுகளை உற்பத்தி செய்கின்றபோது வேண்டப்படுகின்ற ஊழிய மணித்தியாலங்களை கணிக்குக. 06 புள்ளிகள்

b. நிறுவனத்தின் ஊழியர்களின் Learning Effect ஆனது 80% மாக கணிக்கப்பட்டால் அதற்குரிய விளக்கத்தினைத்தருக 03 புள்ளிகள்

மொத்தம் 20 புள்ளிகள்

5.

i. சந்தை என்பதனை எவ்வாறு வரையறை செய்வீர்? MR = MC ஆக உள்ளபோது எவ்வாறு ஒரு சந்தைக்கட்டமைப்பானது இலாபத்தினை உச்சப்படுத்துகிறது என வரைபட உதவியுடன் விளக்குக. 05 புள்ளிகள்

ii. நடைமுறையில் உள்ள பொருட்கள் சேவைகள் உற்பத்தியில் நிறைபோட்டிச்சந்தைக்கட்டமைப்பினை அவதானிக்கமுடியுமா என ஆராய்க. 05 புள்ளிகள்

iii. Learner Index மற்றும் Markup Facor கணிப்பீட்டு முறைகளைக்குறிப்பிட்டு அவை நிறுவனங்களிற்கு எவ்வாறான பயன்பாட்டினைக்கொண்டிருக்குமென விளக்குக. 05 புள்ளிகள்

iv. ஒரு நிறுவனமானது தனியுரிமை சக்தியினை அனுபவிப்பதற்கு சாதகமாக காணப்படும் காரணிகளை உதாரணங்களுடன் விளக்குக. 05 புள்ளிகள்

மொத்தம் 20 புள்ளிகள்

6.

i. பொருள் அல்லது சேவைகள் வேறுபடுத்தல் என்பதனை நடைமுறை உதாரணங்களுடன் விளக்குக. 04 புள்ளிகள்

ii. பின்வரும் கூற்றுக்களுக்கு விளக்கம் தருக

a. இலங்கையின் வங்கிகட்டமைப்பு பலருரிமைச்சந்தையாக காணப்படுகின்ற அதே நேரம் இந்தியாவில் அது சிலருரிமையாக காணப்படுகின்றது. 03 புள்ளிகள்

b. 2000ம் ஆண்டளவில் தனியுரிமையாக இருந்த கைத்தொலைபேசி சேவை 2018ம் ஆண்டளவில் பலருரிமையாக மாற்றங்கண்டுள்ளது. 03 புள்ளிகள்

c. பூரணமற்ற தகவல் (Imperfect Information) நிறையில் போட்டிச்சந்தையின் 03 புள்ளிகள்

இருப்பிற்கு இன்றியமையாதது ஆகும்.

d. பொருட்கள் சேவைகளின் அபிவிருத்திக்கு அந்நிறுவனங்கள் நிறைபோட்டிச்சந்தையின் இயல்புகளைக்கொண்டிருக்கமுடியாது 03 புள்ளி

iii. சந்தைப்பங்கு திரட்சி விகிதம் (Market Share Concentration Ratio ) என்றால் என்ன? அது எவ்வாறு கணிப்பிடப்படுகின்றது என சுருக்கமாக விளக்குக. 04 புள்ளி

மொத்தம் 20 புள்ளி

**7.** பின்வருவனவற்றிற்கு சுருக்கக்குறிப்பு எழுதுக

I. நீண்டகால உற்பத்தித் தொழிற்பாட்டில் குறைந்து செல்லும் எல்லைத் தொழிநுட்பவிளைவு விதி (Marginal Rate of Technical Substitution) 05 புள்ளி

ii. Herfindahl-Hirschman Index (HHI) 05 புள்ளி

iii. Cobb-Douglas உற்பத்தித்தொழிற்பாடும் அளவுத்திட்டவிளைவு விதியும் 05 புள்ளி

iv. Monopsony சந்தைக்கட்டமைப்பும் Oligopsony சந்தைக்கட்டமைப்பும் 05 புள்ளி

மொத்தம் 20 புள்ளி